**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 107/2014**

**Deposition of Witness for : PW 20**

**Name** : டாக்டர் அரவிந்தன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20-12-2023.**

**(A1 to A3 present)**

முதல் விசாரணை -

நான் தற்போது திருவண்ணாமலை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 26.4.2013 ந் தேதி மேற்படி மருத்துவமனையில் பணிபுரிந்து வந்த போது தண்டராம்பட்டு காவல் நிலைய குற்ற எண் 120/2013 சட்டப்பிரிவு 302 இதச கீழ் இறந்து போன பாபு வயது 29 என்பவரின் பிரேதத்தை 106 முருகன் என்பவர் மூலம் அனுப்பிய பிரேதத்தை பெற்று பிரேத பரிசோதனை 26.4.2013 அன்று மதியம் 12.10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது கைகளும், கால்களும் விறைத்த நிலையில் இருந்தது.

வெளிப்புற காயங்கள் - 1) 2க்கு 1க்கு 4 செ.மீ அளவிளான குத்து காயம் வலது பக்க கழுத்தில் காணப்பட்டது. 2) 2க்கு 1க்கு 2 செ.மீ அளவிளான குத்து காயம் இடது பக்க கன்னத்தில் காணப்பட்டது. 3) 3க்கு 1 செ.மீ அளவிலான கிழிந்த காயம் இடது கட்டை விரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் நடுவில் காணப்பட்டது. 4) 2க்கு 0.5 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் வலது தோள்பட்டையில் காணப்பட்டது.

உட்புற பரிசோதனை - உச்சந்தலையில் மண்டை ஓடு, மூளை சவ்வு நன்றாக இருந்தது. மூளை வெளிறி இருந்தது. விலா மற்றும் மார்பு எலும்புகள் நன்றாக இருந்தது. நுரையீரல் வெளிறி இருந்தது. 50 மி.லி உறைந்த ரத்தம் இருதய அறைகளில் காணப்பட்டது. 1லி அளவு உறைந்த ரத்தம் வலது பக்கம் நெஞ்சுக் கூட்டினில் காணப்பட்டது. வயிறு வெளிறி இருந்தது. 200 மி. அளவிலாள பாதி அளவு செறிமானமாக உணவு பொருட்கள் காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல்,

சிறுநீரகங்கள், சிறுங்குடல், பெருங்குடல் வெளிறி இருந்தது. இடுப்பு மற்றும் தண்டுவடம் நன்றாக இருந்தது. பிரேத பரிசோதனை 26.4.2013 பிற்பகல் 2.15 மணிக்கு நிறைவடைந்தது. இறப்பு நேரம் - 12 முதல் 20 மணிநேரம் பிரேத பரிசோதனைக்கு முன்பு நடந்திருக்கலாம். வயிறு, குடல், சிறுநீரகம், கல்லீரல், ரத்தம் ஆகியவைகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. நாவடி எலும்பு நன்றாக இருந்தது, எலும்பு முறிவு காணப்படவில்லை. வயிறு, குடல், சிறுநீரகம், கல்லீரல், ரத்தம் ஆகியவைகளில் விஷமோ அல்லது மருத்து பொருட்களோ காணப்படவில்லை.

இறப்பிற்கான காரணம் - கழுத்தில் உண்டான குத்து காயத்தினால் ரத்தப் போக்கு மற்றும் அதிர்ச்சியினால் இறப்பு ஏற்பட்டு இருக்கலாம் என்று பிரேத அறிக்கை கருத்துரை வழங்கினேன். கூறிய ஆயுதத்தால் கழுத்தில் தாக்கும் போது மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்புண்டு. நான் வழங்கிய பிரேத பரிசேதனை அறிக்கை அ.சா.ஆ. 10, நஞ்சியல் அறிக்கை அ.சா.ஆ. 11, பயாலஜி அறிக்கை அ.சா.ஆ. 12. நாவடி எலும்பு நல்ல நிலையில் இருந்தது என்பதற்கான அறிக்கை அ.சா.ஆ.13. என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u> -

அ.சா.ஆ. 10ல் முதல் குத்து காயத்தின் அளவை பொறுத்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தான் திருத்தம் செய்தேன். திருத்தம் செய்யப்பட்ட இடத்தில் என்னுடைய கையெழுத்தை போடவில்லை. முதலில் குறிப்பிட்டுள்ள அளவு நீளத்தை குறிப்பிடும். முதலில் குறிப்பிட்டுள்ள நீளத்தை பொறுத்தவரை திருத்தம் செய்வதற்கு முன்னால் என்ன அளவு இருந்தது என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன அளவு போஸ்ட் மார்ட்டம் முடிந்த பிறகு வேறு ஒரு பேனாவால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இந்த திருத்தம் ஆனது போஸ்ட் மாட்டம் முடிந்த பிறகு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. முதல் காயம் கழுத்தின் தசை பகுதி அளவு மட்டும் தான் இருந்தது என்றால் சரிதான். முதல் காயம் குத்து காயம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வார்த்தையை நான் எழுதவில்லை என்றால் சரியல்ல நான் தான் எழுதினேன்.

கன்னத்தில் ஏற்பட்ட குத்து காயம் தசை அளவு தான். மூன்றாவது கிழிந்த காயம் ஆள்காட்டி விரலின் தசை அளவு தான் ஆழம் என்று சொன்னால் சரிதான். மூன்றாவது காயம் கத்தியால் குத்தும் போது ஒழுங்கற்ற காயம் ஏற்படாது

என்றால் சரியல்ல, வாய்ப்புண்டு. மூன்றாவது காயம் ஒழுங்கற்ற காயம் என்றால் சரிதான். மூன்றாவது காயம் ஆள்காட்டி விரலில் ஏற்பட்டது கத்தியால் குத்தினால் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். வலது தோள் பட்டையில் ஏற்பட்ட சிராய்ப்பு காயம் கத்தியால் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன 4 காயங்களும் ஒரே ஆயுதத்தால் ஏற்படுத்த வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான்.

பிரேத விசாரணையை நான் மேற்கொள்ளும் போது முதலில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட இறந்து நபரின் விபத்து பதிவேடு நகலை இணைத்து கொடுத்தார்களா என்றால் எனக்கு நினைவில்லை. பிரேத விசாரணை அறிக்கை மேற்கொள்ளுவதற்கு முன்னர் முன் பரிசோதனை அறிக்கையை பார்வையிட வேண்டும் என்றால் சரிதான். நான் கருத்துரை வழங்குவதற்கு முன்னர் ஆயுதத்தை பார்த்து வழங்கவில்லை. 1, 2 காயங்கள் கத்தியால் ஏற்பட வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல வாய்ப்பு இருக்கலாம். கன்னம், ஆள்காட்டி விரல், தோள்பட்டை பகுதியில் ஏற்பட்ட காயத்தினால் இறப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். முதல் காயம் தசை பகுதியில் இருந்து வெளியேறிய ரத்தத்தால் இறப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. அந்த பகுதியில் ரத்தக் குழாய்களின் இணைப்பு உண்டு. என்னுடைய பிரேத விசாரணை அறிக்கையில் ரத்தக் குழாய்கள் அறுக்கப்பட்டதாகவோ, துண்டிக்கப்பட்டதாகவோ நான் சொல்லவில்லை. எந்தெந்த குழாய்கள் அறுக்கப்பட்டது என்று நான் பார்க்கவில்லை என்றும், அவ்வாறு நான் பார்த்திருந்தால் எழுதி இருப்பேன் என்றால் சரியல்ல. தசை பகுதியில் ஏற்பட்ட காயத்தினால் ஒரு நபர் இறந்திருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. எந்த அளவுக்கு ரத்தப் போக்கு வெளியேறியது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. முதல் காயம் கூர்மையாக பகுதியின் மீது கீழே விழும் போது ஏற்பட வாய்ப்புண்டு என்று சொன்னால் விழும் வேகத்தின் அடிப்படையில் ஏற்பட வாய்ப்புண்டு.

நான் பிரேத விசாரணை செய்வதற்கு முன்பு விபத்து பதிவேடு காயங்களை பார்த்தேன் என்றும், அந்த விபத்து பதிவேடில் உள்ள காயங்கள் அனைத்து நான் சொல்லும் காயங்களுடன் ஒத்து வரவில்லை என்றும், அதனால்தான் நான் விபத்து பதிவேடு நகலை பார்த்தேனா என்று நியாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த நபருக்கு உண்மையிலேயே வலது பக்க கழுத்தில் ஒரு சிறிய சிராய்ப்பு காயம் மட்டும் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக நான் பின்னிட்டு விசாரணை அதிகாரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க

காயங்களின் நீள அகலத்தை மாற்றி பிரேத விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/- அரவிந்தன்

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.